
சீசர் சாவேஸ்

எழுத்து: ஜிஞ்சர் வாட்ஸ்வொர்த்

படம்: மார்க் ஷ்ரோடர்

மொழிபெயர்ப்பு: பூர்வ யாக்னிக் குஷ்வாஹா

தமிழில்: சந்தோஷ் குமார்



சீசர் சாவேஸ்

எழுத்து: ஜிஞ்சர் வாட்ஸ்வொர்த்

படம்: மார்க் ஷ்ரோடர்

மொழிபெயர்ப்பு: பூர்வ யாக்னிக் குஷ்வாஹா

தமிழில்: சந்தோஷ் குமார்



அரிசோனா

1933

செசாரியோ சாவேஸுக்கு ஆறு வயதானபோது , அவன் பள்ளிக்குச் செல்ல வேண்டிய நேரம் வந்தது.

செசாரியோ தன் அக்கா ரீட்டாவுடன் அந்த புழுதி நிறைந்த சாலையில் நடந்து வந்தான்.

அவன் சற்று பயந்திருந்ததால் தனது அக்கா ரீட்டாவின் கையைப் பிடித்துக்கொண்டான்.

அவனுக்குக் காலணி கூட அணிந்து பழக்கமில்லாத காரணத்தால் அவனது கால்கள் வலித்தன.

செசாரியோவின் ஆசிரியர் அவனது பெயரை 'சீசர்' என்று சுருக்கினார்.

அப்படியிருந்தும் , சீசர் என்ற பெயர் மெக்சிகன் பெயராக அவ்வளவாகத் தோன்றவில்லை.


ஆசிரியர் குழந்தைகளிடம் ஆங்கிலத்தில் பேசுமாறு அறிவுறுத்தினார்.

வீட்டில் எல்லோரும் ஸ்பானிஷ் மொழி பேசுவதால் ஆங்கிலத்தில் பேசுவது கடினமாக இருந்தது.

சீசர் பல சமயங்களில் ஆங்கிலம் பேச மறந்துவிடுவான்.

அதன்பின் ஆசிரியை ஒரு அளவுகோலால் அவனது விரல்களின் மேல் அடிப்பார்.





சீசரின் தாத்தா பாட்டி மெக்சிகோவில் பிறந்தவர்கள்.

சீசரின் தாத்தா ஒரு குரூரமான பண்ணை உரிமையாளரிடம் பணிபுரிந்தார்.

பண்ணை உரிமையாளர் தன் தொழிலாளர்களைச் சவுக்கால் அடித்து கொடுமைப்படுத்தினார்.

சீசரின் தாத்தா, இறுதியில் அரிசோனாவுக்குத் தப்பிச் சென்றார்.

அவர் தன் குடும்பத்தை அங்கு அழைத்துச் சென்றார். சீசரின் தந்தை லிப்ராடோ , அவனது தாய் ஜுவானாவை அரிசோனாவில் சந்தித்திருந்தார்.

ஜுவானாவும் மெக்சிகோவில் பிறந்தவர் தான்.

சீசர் அரிசோனாவில், யூமாவிற்கு அருகில் பிறந்தார்.

ரிச்சர்ட் மற்றும் லானி அவனுடைய தம்பிகள்.

மேலும், இளையவளான விக்கி, இன்னும் குழந்தையாகவே இருந்தாள்.

அவர்கள் தடித்த களிமண் செங்கற்களால் ஆன வீட்டில் வசித்து வந்தனர்.

அவரது வீடு கோடையில் குளிர்ச்சியாகவும், குளிர்காலத்தில் கதகதப்பாகவும் இருந்தது.



சீசர் இரவு நேரத்தில், தன் தந்தை தகரக்கேன்களையும் மரத்துண்டுகளையும் கொண்டு பொம்மை கார்களைச் செய்வதைப் பார்த்துக் கொண்டிருப்பான்.

சீசரும் அவரது சகோதரர்களும் தங்கள் கார்களை தரையில் வைத்து விளையாடினர்.

படுக்கை நேரத்தில், அவர்களின் பாட்டி குழந்தைகளின் பிரார்த்தனைகளைக் கேட்டார்.







சாவேஸ் குடும்பத்தில் உள்ள அனைவரும் அவர்களது பண்ணையில் வேலை செய்தனர்.

சீசரின் தந்தை மண்ணில் விதைகளை விதைத்தார்

மண்வெட்டியால் களைகளை அகற்றினார்.

ஆற்றிலிருந்து வயல்களுக்குத் தண்ணீர் கொண்டு வர கால்வாய்கள் தோண்டினார்.

தண்ணீர் இல்லாமல் பயிர் வளராது.

சீசரும் ரிச்சர்டும் குதிரைகளுக்கும் மாடுகளுக்கும் கோழிகளுக்கும் உணவளித்தார்கள்.அவர்கள் முட்டைகளையும் சேகரித்தார்கள்.ரீட்டா அனைவரின் துணிகளையும் கையால் துவைப்பாள்.ஜுவானா மக்காச்சோள மாவிலிருந்து டார்ட்டிலாக்களை (ரொட்டி) தயாரிப்பார்.அவர்கள் குடும்பம் ஏழ்மையானதாக இருந்தது.


அப்படியிருந்தும், ஜுவானா வீடற்றவர்களை தங்களுடன் உன்ன அழைப்பாள்.எந்தவொரு மனிதனும் பசியுடன் இருக்கக்கூடாது என்று அவர் நம்பினார்.

சீசரின் அத்தைகள் , மாமாக்கள் , மற்றும் அவர்களின் பிள்ளைகள் அருகிலேயே வசித்து வந்தனர்.

அவர்கள் அனைவரும் விருந்துக்கு சாவேஸ் குடும்பப் பண்ணைக்கு வருவார்கள்.
எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து நல்ல உணவைச் சாப்பிடுவார்கள்.

சீசரும் அவரது உறவினர்களும் கால்வாய்களில் நீந்துவார்கள்.

குதிரை சவாரி செய்வார்கள் , மரங்களில் ஏறுவார்கள்.
அந்த வாழ்க்கை மகிழ்ச்சியாக இருந்தது.





கடினமான காலங்கள்

1930கள்

1930களில் , அமெரிக்காவில் மில்லியன் கணக்கான மக்கள் வேலையிழந்தனர்.

வங்கிகள் மூடப்பட்டன.

பல கடைகளும் கூட.

பல குடும்பங்களுக்கு உணவு வாங்கக் கூட பணம் இல்லை.

பண்ணைகளையும் விற்க வேண்டியிருந்தது .

இது பெரும் பொருளாதார மந்தநிலைக் காலம்.

சாவேஸ் குடும்பத்தில் இன்னும் நிறைய பால், முட்டை மற்றும் காய்கறிகள் இருந்தன.

அவர்களுக்கு விற்பதற்கும், சாப்பிடுவதற்கும் போதுமான உணவு இருந்தது. அப்போது வறட்சி ஏற்பட்டது.

மழையின்றி கால்வாய்கள் வறண்டன.

தண்ணீர் இல்லாமல்,

குடும்பம் பயிர்களை வளர்க்க முடியவில்லை.


கோழிகள் கொத்தித் தின்ன சோளம் இருக்கவில்லை.

அதனால் கோழிகள் முட்டையிடுவதை நிறுத்திவிட்டன.

மாடுகள் மேய்வதற்குப் புல் இல்லை.

அதனால் அவை பால் கொடுப்பதை நிறுத்திவிட்டன.





1938- ல் , சாவேஸ் குடும்பத்தினர் தங்கள் நிலத்தை விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அவர் தனது காரில் ஏறி, வேலை தேடி கலிபோர்னியாவுக்குப் புறப்பட்டார்.

சீசருக்கு 11 வயது.
கலிபோர்னியாவில் பெரிய பண்ணைகள் இருந்தன.

அந்த வயல்களின் உரிமையாளர்களுக்கு, விதைகளை விதைக்கவும் , களைகளைப் பிடுங்கவும், பயிர்களை அறுவடை செய்யவும் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர் .

ஏழைத் தொழிலாளர்கள் வேலை தேடி ஒரு பண்ணையிலிருந்து மற்றொரு பண்ணைக்கு அலைவார்கள்.

அவர்கள் 'புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்' என அழைக்கப்பட்டனர்.

வசந்த காலத்தில், சாவேஸ் குடும்பத்தினர் இந்த வயல்களில் விதைப்புப் பணியில் ஈடுபடுவார்கள்.

அப்போது வயல்வெளிகளில் குளிராக இருக்கும்.

சீசர் வழக்கமாக வெறும் கால்களுடனேயே வேலை செய்தார்.

ஏனென்றால் காலணிகள் விலை உயர்ந்தவையாக இருந்தன.

கோடைக்காலத்தில் சுட்டெரிக்கும் வெயில் இருந்தது.

சீசர் குட்டைக் கைப்பிடி கொண்ட மண்வெட்டியால் களைகளைப் பிடுங்குவார்.

அவருக்கு எப்போதும் முதுகு வலிக்கும். நாள் முழுவதும் குனிந்தபடியே வேலை செய்வது எளிதாக இருக்கவில்லை.

சில சமயங்களில் வயல்களில் இருந்து பூச்சிக்கொல்லி என்னும் விஷத்தின் வாசனையை அவர் நுகர்வார்.

பண்ணை உரிமையாளர்கள் தங்கள் பயிர்களில் பூச்சிகள் தாக்குவதைத் தடுக்க பூச்சிக்கொல்லிகளைத் தெளிக்கிறார்கள்.

ஆனால், சில பூச்சிக்கொல்லிகள் விவசாயத் தொழிலாளர்களை நோய்வாய்ப்படுத்தின.



தொழிலாளர்களின் பிள்ளைகள் மரங்களிலிருந்து ஆரஞ்சு மற்றும் எலுமிச்சைப் பழங்களைப் பறிப்பார்கள்.

அவர்கள் பட்டாணியையும் அவரைக்காயையும் , பருத்தியையும் பறிப்பார்கள்.

தொழிலாளர்கள் இந்தப் பழங்களையும் காய்கறிகளையும் பெட்டிகளில் நிரப்புவார்கள்.

ஒவ்வொரு பெட்டியின் எடைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்பட்டது.



குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் வேலையில் உழைத்தார்கள்
.
தேவையான பணத்தைச் சம்பாதிக்க இதுதான் ஒரே வழியாக இருந்தது.

ஒரு குடும்பம் குறைந்த கூலிக்கு வேலை செய்ய விரும்பவில்லை என்றால் , வேறு ஒரு குடும்பம் அவர்களுக்குப் பதிலாக வேலை செய்ய முன்வரும்.

ஒரு வயலில் அறுவடை முடிந்ததும் , சாவேஸ் குடும்பத்தினர் மற்றொரு வயலுக்குச் செல்வார்கள்.

அவர்களுக்குப் பணம் தேவைப்பட்டது.







சாவேஸ் குடும்பத்தினர் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான முகாம்களில் வசித்து வந்தனர்.

வயல்வெளிகளில் அமைக்கப்பட்ட இந்த முகாம்கள் நெரிசலாகவும் அசுத்தமாகவும் இருந்தன.

சாவேஸ் குடும்பத்தினர் ஒரு சிறிய குடிசையில் நெருக்கியடித்துக்கொண்டு வசிக்க வேண்டியிருந்தது.

குடிசையின் தரை சரிசெய்யப்படாமல் இருக்கும், மேலும் குளியலறையும் இருக்காது.

மழை பெய்தால் எல்லாம் நனைந்துவிடும். சுற்றிலும் சேறாகவே இருந்தது.

பல முகாம்களில் குடிசைகள் கூட இல்லை , கூடாரங்கள் மட்டுமே இருந்தன.

கூடாரங்கள் மிகவும் சிறியதாக இருந்தன.

சீசரும் ரிச்சர்டும் வெளியே தூங்க வேண்டியிருக்கும். ரீட்டா வண்டியில் தூங்குவாள்.


ஜுவானா வெளியே ஒரு பெரிய பானையில் உணவு சமைக்க வேண்டியிருந்தது.

ஆனாலும் அவள் பசித்தவர்களுக்கு உணவளிப்பதை நிறுத்தவில்லை.

உணவு தேவைப்படும்போது, சீசரின் பெற்றோர் அருகிலுள்ள நகரத்திற்குச் சென்று பொருட்கள் வாங்குவார்கள்.

சில கடைகளில் 'வெள்ளையர்களுக்கு மட்டும் விற்பனை' என்று ஒரு அறிவிப்புப் பலகை இருக்கும்.

சீசரின் குடும்பம் பூர்வீகமாக மெக்சிகோவைச் சேர்ந்தவர்கள் என்பதால்,அவர்களால் இந்தக் கடைகளில் பொருட்கள் வாங்க முடியவில்லை.



சீசர் அரிசோனாவின் நினைவுகளில் ஏங்கினான்.
அவன் குதிரை சவாரி செல்ல விரும்பினான்.
அவன் மரங்களில் ஏற விரும்பினான்.

அவனுடைய பொம்மை கார் திருடப்பட்டபோது, அந்தத் திருடனைப் பிடித்து அடித்து நொறுக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது.

ஜுவானா தன் மகனைச் சண்டையிடக் கூடாது என்று கூறினார்.
சண்டையிட இரண்டு பேர் தேவை என்று அவள் எப்போதும் சொல்வாள்.

மேலும் அவள், 'உங்கள் பிரச்சனைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளுங்கள்' என்று அறிவுறுத்தினாள்.







வளர் இளம் பருவம் – 1942

சீசர் தனது 15-வது வயதில் கலிபோர்னியாவின் டெலானோ (Delano) நகரில் ஹெலன் ஃபேபெலாவைச் சந்தித்தார்.

ஹெலனின் பெற்றோர் அங்குப் பருத்தி பறிக்கும் பணிக்காக வந்திருந்தனர்.

1948-ல் சீசரும் ஹெலனும் திருமணம் செய்துகொண்டனர்.
அடுத்த ஆண்டே அவர்களுக்கு ஃபெர்னாண்டோ என்ற மூத்த மகன் பிறந்தான்.

அதைத் தொடர்ந்து மேலும் பல குழந்தைகளும் பிறந்தனர்.

சீசரும் ஹெலனும் கடினமாக உழைத்தார்கள்.

அவர்கள் பீன்ஸ் , ஸ்ட்ராபெர்ரி மற்றும் பல பயிர்களை அறுவடை செய்தனர்.

அவர்கள் இருவருக்கும் ஒரு மணி நேர வேலைக்குச் சுமார் ஒரு டாலர் கிடைத்தது.

குழந்தைகளின் உணவு , உடை மற்றும் ஒரு எளிய வீட்டிற்கு இது போதுமானதாக இல்லை .

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்குச் சிறந்த ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று சீசர் கருதினார்.

சீசர் தலைவர்களைப் பற்றிய புத்தகங்களைப் படித்தார். தலைவர்கள் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த எப்படி உதவுகிறார்கள் என்பதை அவர் தெரிந்துகொள்ள விரும்பினார்.


பின்னர் சீசர் டெலோரஸ் வெர்டாவைச் சந்தித்தார். டியோலோரஸ் மெக்சிகன்-அமெரிக்க விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவினார்.

சீசர், ஃப்ரெட் ராஸையும் சந்தித்தார். புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அமெரிக்கக் குடியுரிமை பெற வேண்டும் என்று ஃப்ரெட் விரும்பினார்.

அதனால் அவர்களும் வாக்களிக்க முடியும். அவர்கள் தொழிலாளர்களின் நலனுக்காக வாக்களிக்க வேண்டும்.

டெலோரஸ் மற்றும் ஃப்ரெட்டின் சில யோசனைகள் அருமையாக இருந்தன. மக்கள் ஒன்றுபட்டால் தங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொள்ள முடியும் என்று அவர்கள் இருவரும் நம்பினார்கள்.

ஏழை மெக்சிகன்-அமெரிக்கத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டால், அவர்களாலும் சக்திவாய்ந்தவர்களாக ஆக முடியும்.



தன் தாயைப் போலவே, சீசரும் மற்றவர்களுக்கு உதவ விரும்பினார்.

எனவே அவர் மெக்சிகன் அமெரிக்கர்கள் வாக்களிக்கப் பதிவு செய்ய உதவினார்.

சீசரும் டொலொரஸும் தொழிலாளர் சங்கத்தைத் தொடங்கினார்கள் , அதாவது, அவர்கள் தொழிலாளர்களின் ஒரு குழுவை உருவாக்கினார்கள்.

இது அமெரிக்காவில் அமைக்கப்பட்ட முதல் பண்ணை ஊழியர்கள் சங்கம் ஆகும்.

சீசர் கலிபோர்னியா முழுவதும் பயணம் செய்தார். விவசாயம் செய்யப்படும் நகரங்களுக்குச் சென்று, தொழிலாளர்களிடம் தொழிற்சங்கம் குறித்துப் பேசினார்.


அவர்கள் சங்கத்தில் சேர்ந்தால், அவர்கள் ஒரு ஒரு குழுவாக ஆகலாம் என்று அவர் அவர்களிடம் கூறுனார்.

அவர்கள் தங்கள் பண்ணை உரிமையாளர்களிடம் மாற்றங்களைச் செய்யுமாறு கேட்கலாம்.

உரிமையாளர்கள் பின்வாங்கினால், அவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடலாம்.

மாற்றங்களைச் செயல்படுத்தும் வரை தொழிற்சங்க உறுப்பினர்கள் வேலைநிறுத்தம் செய்யலாம்.





பல தொழிலாளர்கள் சீசரின் பேச்சைக் கேட்டார்கள்.

அவர் ஒரு திறமையான தலைவராக இருந்தார்.

ஒருவேளை சீசர் சொல்வது சரியாக இருக்கலாம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

தொழிலாளர்கள் குடிசைகளிலும் கூடாரங்களிலும் வாழ்ந்து சலித்திருந்தனர். தங்களுக்கு நோயை உண்டாக்கும் பூச்சிக்கொல்லிகளுடன் வேலை செய்ய அவர்கள் விரும்பவில்லை.

மாற்றத்தைக் கொண்டுவருவது கடினமாக இருக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

சீசருக்கும் இது தெரிந்திருந்தது.

ஆனாலும், அவர் முயற்சி செய்ய விரும்பினார்.

இவை அனைத்தையும் வன்முறையின்றி , அமைதியான முறையில் செய்ய விரும்பினார் .

சீசர் கைகளால் சண்டையிடுவதை நம்பவில்லை.

சீசர் தோல்வியடைவார் என்று பலர் நம்பினர். ஏனென்றால், பெரும்பாலான பண்ணை உரிமையாளர்கள் செல்வந்த குடும்பங்களாகவோ அல்லது பெரிய நிறுவனங்களாகவோ இருந்தனர். இங்கே சீசர் ஏழையாக இருந்தார். அவனது தோல் நிறம் வெளுப்பாக இருக்கவில்லை , அது கருமையாக இருந்தது. மேலும் அவர் ஒரு பண்ணை ஊழியராக மட்டுமே இருந்தார்;
ஆயிரக்கணக்கானோரில் ஒருவராக.





செயல்!

1965

சீசர் ஒரு சக்திவாய்ந்த தொழிற்சங்கத் தலைவரானார்.

வேலைநிறுத்தம் செய்ய இதுவே சரியான நேரம் என தொழிற்சங்கம் முடிவு செய்தது.

கலிபோர்னியாவில் உள்ள தொழிலாளர்கள் திராட்சை அறுவடை செய்ய மாட்டார்கள் என முடிவு செய்யப்பட்டது.

திராட்சைகள் கொடிகளிலேயே அழுகின.

பண்ணை உரிமையாளர்கள் நஷ்டத்தைச் சந்தித்தனர்.

திராட்சைகளை வாங்க வேண்டாம் என்று சீசர் வாங்குபவர்களிடம் கூறினார்.

பல குடும்பங்கள் இதற்கு ஒப்புக்கொண்டன. அவர்கள் திராட்சை வாங்கவில்லை.

சில கடைகள் திராட்சை விற்பதை முற்றிலுமாக நிறுத்திவிட்டன.

பல லாரி ஓட்டுநர்கள் திராட்சையை ஏற்றிச் செல்ல மறுத்துவிட்டனர்.

பண்ணை உரிமையாளர்கள் மேலும் இழப்புகளைச் சந்தித்தனர்.


தொழிலாளர்கள் கவலைப்படத் தொடங்கினர்.


அவர்களுக்கு ஊதியம் கிடைக்கவில்லை. அவர்கள் தங்கள் குடும்பத்தினருக்கு எப்படி உணவளிபார்கள்?

அவர்கள் வெறு பயிர்களை அறுவடை செய்யும் வேலையைத் தேட வேண்டியது தான்.

பொறுமையாக இருக்கும்படி சீசர் அவர்களிடம் கூறினார்.

தொழிலாளர்களுக்கும் உரிமைகள் உண்டு என்று கூறினார்.









ஒரு வருடம் முழுமையாகக் கடந்துவிட்டது.

வேலைநிறுத்தம் பற்றி அதிக மக்களிடம் சொல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது.

1966- ல் சீசர் , கலிபோர்னியாவின் தலைநகரான சாக்ரமெண்டோவிற்கு ஒரு பேரணியை வழிநடத்திச் சென்றார் .

டெலானோவிலிருந்து சாக்ரமெண்டோ வரையிலான 300 மைல் பயணத்தைக் கடக்க 25 நாட்கள் ஆயின.

செய்தி பரவியது.

மற்ற மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் சீசருடன் ஊர்வலத்தில் கலந்துகொள்ள வந்தனர்.

நடிகர்கள் , தலைவர்கள் , மாணவர்கள் மற்றும் அரசு அதிகாரிகளும் தொழிலாளர்களுடன் இணைந்து நடந்தனர்.

வழியில், பிற பண்ணைப் பணியாளர்கள் அவர்களுக்கு உணவும் தண்ணீரும் ஏற்பாடு செய்தனர்.

சீசரின் கால்கள் நொந்தன.

அவருக்குக் கடுமையான காய்ச்சலும் ஏற்பட்டது.

ஆனாலும், சீசர் நடந்து கொண்டிருந்தார்.

மக்கள் அந்த ஊர்வலத்தைப் பற்றி
செய்தித்தாள்களில் படித்தனர்.

அவர்கள் அந்த செய்தியைத்
தொலைக்காட்சியில் பார்த்தனர்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உதவ
வேண்டும் என்று சிலர் கருதினர்.

ஆனால் வேறு சிலர் இதை ஏற்கவில்லை.
திராட்சைப் போராட்டம் தொடர்ந்தது.

மற்ற மாநிலங்களில் உள்ள அமெரிக்கர்களும்
திராட்சை வாங்குவதை நிறுத்திவிட்டனர்.

சீசரும் யூனியனும் ஒரு தாக்கத்தை
ஏற்படுத்துவதாகத் தோன்றியது.

இறுதியாக, ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, திராட்சைத்
தோட்ட உரிமையாளர்கள் சரணடைந்தனர்.

1970- ல் வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்தது .

தொழிலாளர்கள் சிறந்த ஊதியம் பெறத் தொடங்கினர்.

அவர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்காகப் பணம்
கிடைத்தது.

சீசர் மிகவும் சோர்வாக இருந்தார் , ஆனாலும் மிகுந்த
மகிழ்ச்சியுடனும் இருந்தார்.

அது ஒரு நல்ல துவக்கம்.

தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பினர்.







வேலைநிறுத்தத்திற்குப் பிறகு
1970

சீசரும் ஹெலனும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தனர்.

அவருக்கு எட்டு பிள்ளைகள் இருந்தனர்.

தொழிற்சங்கம் அவர்களின் தங்குமிடம் மற்றும் உணவுக்காகப் பணம் வழங்கியது.

குடும்பத்தைக் காப்பாற்றத் தேவையான பணம் இருந்தது.

சீசர் தினமும் தொழிற்சங்கத்திற்காகப் பணியாற்றினார்.

அவர் கூட்டங்களுக்குச் சென்றார்.

புதிய ஊர்வலங்களை வழிநடத்தினார்.

அவர் உரைகள் ஆற்றினார்.

அனைத்து விவசாயத் தொழிலாளர்களும் நியாயமாக நடத்தப்படுவதை அவர் உறுதி செய்ய விரும்பினார்.

அவர் அடிக்கடி வாரக்கணக்கில் வீட்டிலிருந்து வெளியூரில் இருப்பார்.

எப்போதும் சோர்வாகவே இருந்தார்.


1993-ஆம் ஆண்டு ஒரு நாள் இரவு , சீசர் இறந்தார்.

அவரது கருணை மிக்க இதயம் சீக்கிரமே செயலிழந்து போனது.

அவருக்கு வயது 66 .

சீசருக்கு மரியாதை செலுத்தும் விதமாக கலிபோர்னியா கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.

சீசரின் சகோதரரான ரிச்சர்ட் அவருக்காக ஒரு தேவதாரு மர சவப்பெட்டியைச் செய்தார்.




சீசர் டெலானோவில் அடக்கம் செய்யப்பட்டார்.

அவரது இறுதிச் சடங்கில் 40,000 பேர் கலந்து கொண்டனர்.

சீசர் தன் வாழ்நாள் முழுவதும் மக்களுக்கு உதவினார்.

அவர் வார்த்தைகளால் உதவினார், கைகளால் அல்ல.





முதல் திராட்சை வேலைநிறுத்தத்தின் இருபதாம் ஆண்டு நிறைவு விழாவில் சீசர் சாவேஸ் உரையாற்றுகிறார்.

சீசர் சாவேஸ் தனது பங்களிப்புகளுக்காக எண்ணற்ற கௌரவங்களைப் பெற்றார். 1990- ல், மெக்சிகோ தனது மிக உயரிய கௌரவமான ஆஸ்டெக் கழுகு விருதை அவருக்கு வழங்கியது . 1994- ல் , சீசரின் மரணத்திற்கு ஒரு வருடம் கழித்து, சாவேஸ் குடும்பத்தினர் வாஷிங்டன், டி.சி.க்குச் சென்றனர். அங்கு வெள்ளை மாளிகையில், சீசரின் நினைவாக வழங்கப்பட்ட ஜனாதிபதியின் சுதந்திரப் பதக்கத்தை அவர்கள் பெற்றுக்கொண்டனர்.

வன்முறையற்ற வழிகளில் மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்று நம்பிய மற்ற தலைவர்களிடமிருந்து சீசர் உத்வேகம் பெற்றார். மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி மற்றும் மார்ட்டின் லூதர் கிங் ஆகியோர் அத்தகைய இரு தலைவர்கள் ஆவர்.

உலகில் அனைவருக்கும் அடிப்படை மனித உரிமைகள் கிடைக்கும் வரை, கார்கள் , தொலைக்காட்சிகள் மற்றும் பிற ஆடம்பரப் பொருட்களைப் பயன்படுத்துவது சரியல்ல என்று அவர் எண்ணினார்

சீசர் சாவேஸ் மற்றும் டெலோரஸ் வெர்டா 1962- ல் தேசிய பண்ணைத் தொழிலாளர் சங்கத்தை நிறுவினர் . இந்த அமைப்பு பின்னர் அமெரிக்காவின் ஐக்கிய பண்ணைத் தொழிலாளர் சங்கம் (UFW) ஆனது. சீசருக்குப் பிறகு, அவருடைய பல சக ஊழியர்களும் அவர்களது குழந்தைகளும் UFW-க்காகத் தொடர்ந்து பணியாற்றினர். புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு ஆதரவான மாற்றங்களையும் சட்டங்களையும் இயற்றுமாறு மாநில அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்காக, UFW உறுப்பினர்கள் இன்றும் ஆண்டுதோறும் கலிபோர்னியாவின் தலைநகரான சாக்ரமெண்டோவிற்குப் பேரணி செல்கின்றனர். அந்தப் பேரணியின் போது அவர்களின் முழக்கம் "விவா லா காசா!" ("Viva la Causa!") (நோக்கம் வாழ்க!) என்பதாகும்.

கலிபோர்னியாவில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 அன்று சாவேஸ் கௌரவிக்கப்படுகிறார் . ஒரு லத்தீன் அமெரிக்கத் தலைவரின் பெயரால் விடுக்கப்படும் முதல் விடுமுறை நாள் இதுவாகும். குழந்தைகள் சாவேஸைப் பற்றிப் படித்து, அவரது வாழ்க்கையைக் கொண்டாடுகிறார்கள். பல பள்ளிகள் , தெருக்கள் மற்றும் பூங்காக்களுக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் மில்லியன் கணக்கான புலம்பெயர் தொழிலாளர்கள் வாழ்கின்றனர். கடினமான மற்றும் அபாயகரமான வேலைகளுக்கு அவர்களுக்குக் குறைந்த ஊதியம் வழங்கப்படுகிறது. மற்ற அமெரிக்கத் தொழிலாளர்களைக் காட்டிலும் புலம்பெயர் தொழிலாளர்கள் நோய்களுக்கு எளிதில் ஆளாகின்றனர். அவர்களின் குழந்தைகள் வறுமையில் வளர்கின்றனர். அவர்களில் பலருக்குப் புற்றுநோய் ஏற்படுகிறது. விவசாயத்தில் பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகள் மற்றும் நச்சு இரசாயனங்களே இதற்குக் காரணம் என்று மருத்துவர்களும் பொது சுகாதாரப் பணியாளர்களும் நம்புகின்றனர்.

சீசர் சாவேஸ் தன் வாழ்நாள் முழுவதையும் பிறருக்கு உதவுவதற்காக அர்ப்பணித்தார். அந்தப் பணி தொடர வேண்டும். அவர் 1968- ல் , " நம்மிடம் இருப்பது நம்முடைய வாழ்க்கை மட்டுமே, நாம் அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பது தான் நாம் எத்தகைய மனிதர்கள் என்பதை தீர்மானிக்கிறது" .

முக்கியமான தேதிகள்

1927 – மார்ச் 31 அன்று அரிசோனாவின் யூமா அருகே சீசர் சாவேஸ் பிறந்தார் .

1937-44 – கலிபோர்னியாவின் பல்வேறு இடங்களில் தனது குடும்பத்துடன் புலம்பெயர்ந்த விவசாயத் தொழிலாளர்களாக அலைந்தார்.

1942 - எட்டாம் வகுப்பை முடித்தார்.

1944 - அமெரிக்க கடற்படையில் சேர்ந்தார்.

1948 – ஹெலன் ஃபேபெல்லாவை மணந்தார்.

1962 – தேசிய விவசாயத் தொழிலாளர் சங்கம் தொடங்கப்பட்டது.

1965 – திராட்சைப் பறிக்கும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் தொடங்கியது.

1966 – சாக்ரமெண்டோவிற்கு கால்நடையாக ஒரு எதிர்ப்புப் பேரணியை வழிநடத்தினார்.

1970 - திராட்சைத் தோட்ட உரிமையாளர்கள் தொழிற்சங்கத்தின் கோரிக்கைகளுக்கு இணங்கினர். கீரைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தைக் கைவிட மறுத்ததற்காக சீசர் சிறையில் அடைக்கப்பட்டார்.

1972 – NFWA, அமெரிக்காவின் ஐக்கிய பண்ணைத் தொழிலாளர்கள் எனப் பெயர் மாற்றப்பட்டது.

1975 – கலிபோர்னியா வேளாண் தொழிலாளர் உறவுகள் சட்டத்தை இயற்றியது. இது விவசாயத் தொழிலாளர்களின் உரிமைகளை எடுத்துரைக்கும் முதல் சட்டமாகும்.

1988 – பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டை சீசர் எதிர்த்தார்.

1990 - சீசருக்கு மெக்சிகோவின் உயரிய கௌரவமான 'அகுயிலா அஸ்டெகா' வழங்கப்பட்டது, அதாவது ஆஸ்டெக் கழுகு.

1993 – ஏப்ரல் 21 அன்று அரிசோனாவில் காலமானார்.

1994 - சீசருக்கு மரணத்திற்குப் பின் ஜனாதிபதி சுதந்திரப் பதக்கம் வழங்கப்பட்டது. அவரது குடும்பத்தினர் சீசர் ஈ. சாவேஸ் அறக்கட்டளையை நிறுவினர்.